## பாரம்பரியத்துக்கு ஊக்கம்:

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் பல்லாங்குழி, பரமபதம்!

## ஒரு மாதம் விளையாட்டு விழா!!

சென்னை, ஜூலை.12– பாரம்பரியத்துக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், மெட்ரோரெயில்நிலையங்களில் ஒரு மாதம் விளையாட்டு விழா நடத்தப்படுகிறது. இதில்பல்லாங்குழி, பரமபதம், ஆடுபுலியாட்டம் உள்ளிட்டவை இடம் பெறுகின்றன.

தமிழ்நாட்டில் பாரம்பரிய விளையாட்டுகள் எண்ணற்றவை உள்ளன. ஆனால் கால மாற்றத்தால் இந்த விளையாட்டுகள் விளிம்புக்கு தள்ளப்பட்டு விட்டன. இந்தவிளையாட்டுகளை மீண்டும் முதன்மைப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் கிரீடா என்ற நிறுவனம் இயங்கி வருகிறது. சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக பழங்கால விளையாட்டுகளை கிரீடா நிறுவனம்ஊக்குவித்துவருகிறது.

மெட்ரோ ரெயிலுடன் கிரீடாநிறுவனம்இணைந்து சுமார் 1 மாதகாலம்பாரம்பரிய விளையாட்டுகளை மெட்ரோரெயில்நிலையங்களில் நடத்துகிறது. இந்த விளையாட்டு விழா பழங்கால விளையாட்டுகளை மக்களிடையே மீண்டும் கொண்டு செல்லும் என்பதில் கிரீடா நிர்வாகிகள் முழு நம்பிக்கை வைத்துள்ளனர். எந்தெந்த நாட்களில் எந்தெந்தவேளைகளில்எந்தெந்த மெட்ரோ ரெயில் நிலையங்களில் பாரம்பரியம்விளையாட்டுகள்நடத்தப்படுகின்றன என்பது தொடர்பான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இம்மாதம் 16–ந் தேதி மாலை 4 மணியிலிருந்து 6 மணிவரை நந்தனத்திலும், 17–ந் தேதி காலை 10 மணி முதல் 12 மணி வரை கிண்டியிலும், 18–ந்தேதிமாலை 4 மணி முதல் 6 மணி வரை அரும்பாக்கத்திலும், 19–ந் தேதி மாலை அசோக்நகரிலும், 20–ந் தேதி மாலை திருமங்கலத்திலும், 22–ந் தேதி மாலை கீழ்பாக்கத்திலும், 23–ந் தேதிமாலைவிமானநிலையத்திலும், 24–ந் தேதி பரங்கிமலையிலும், 25–ந் தேதி காலை வடபழனியிலும், 26–ந் தேதி மாலை ஈக்காட்டுதாங்கலிலும், 27–ந்தேதி மாலைஅண்ணாநகர்கிழக்கிலும், 28–ந் தேதி மாலை பச்சையப்பா கல்லூரியிலும், 29–ந் தேதி காலை சைதை–சின்னமலையிலும், 30–ந் தேதி மாலை சென்ட்ரலிலும், 31–ந்தேதி மாலை சைதாப்பேட்டையிலும் பாரம்பரிய விளையாட்டுகள் நடத்தப்படுகின்றன.

ஆகஸ்டு மாதம் முதல் தேதி மாலை ஆலந்தூரிலும், 2–ந் தேதி மாலை அண்ணாநகர் கோபுரத்திலும், 3–ந் தேதி மாலை டி.எம்.எஸ்.சிலும், 4–ந் தேதி மாலை ஷெனாய்நகரிலும், 5–ந் தேதி மாலை நேரு பூங்காவிலும், 6–ந் தேதி மாலை சி.எம்.பி.டி.யிலும், 7–ந்தேதிகாலை நங்கநல்லூர்சாலையிலும், 8–ந் தேதி மாலை தேனாம்பேட்டையிலும், 11–ந் தேதி மாலை எழும்பூரிலும், 12–ந் தேதி மாலை கோயம்பேட்டிலும், 13–ந் தேதி மாலை மீனம்பாக்கத்தில் பாரம்பரிய விளையாட்டுகள் நடத்தப்படுகின்றன. இந்த விளையாட்டுகளில் பங்கேற்குமாறுகிரீடாநிர்வாகிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மெட்ரோரெயில் நிர்வாகம் சார்பிலும் இதே போல் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.